**PONDICHERRY UNIVERSITY**
(A Central University)
**PUBLIC RELATIONS WING**

**Press Release from K.MAHESH, Assistant Registrar, Public Relations**

**Thursday, 11 October, 2018**


## புதுவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங்கிற்கு தேசிய விருது

புதுடெல்லியில் இயங்கி வரும், இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப்பு நிறுவனம் (FICCI) இந்தியாவில், இரசாயனம் மற்றும் பெட்ரோல் இரசாயனம் தொடர்பான ஆய்வுகளில் தொடர்ந்து ஈடுபட்டு உலகளவில் தொழில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்து வரும் மிகச் சிறந்த ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைப் பல்வேறு துறைகளில் தேர்வுச் செய்து ஆண்டுதோறும் "கெமிக்கல்ஸ் மற்றும் பெட்ரா கெமிக்கல்ஸ் விருது" களை வழங்கி வருகின்றது.

இந்நிலையில், 2018 ஆம் ஆண்டிற்கான விருது, புதுவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங்கிற்கு வழங்கப்பட்டுள்ளது.

மும்பையில், மத்திய அரசின் இரசாயனம் மற்றும் பெட்ரோல் இரசாயனத்துறை செயலர் இராகவேந்திர இராவ் தலைமையில் நடைபெற்ற விருதளிப்பு விழாவில், சாலைப் போக்குவரத்து, கப்பல் மற்றும் நீர் மேலாண்மைத் துறை அமைச்சர் நித்தின் கட்கரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**K. MAHESH (Assistant Registrar, Public Relations)**